OS.No.113/2023

PW 1–மோகனசுந்தரம்

த/பெ.ரங்கசாமி

நாள். 25.04.2025.

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் பட்டப்படிப்பு படித்து இருக்கிறேன் பனியன் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன் தற்போது எந்த தொழிலும் கிடையாது .அது தனிநபர் நிறுவனம் ஆகும் .அதற்கு தனிப்பட்ட ஆவணங்கள் எதுவும் கிடையாது. நான் அவற்றை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவும் இல்லை. தொழில் செய்தபோது வருமான வரி கட்டி இருக்கிறேன்.என்னுடைய வருமான வரி சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.பிரதிவாதியின் கணவர் என் நண்பர் என்று சொன்னால் நாங்கள் எல்லோரும் ஒரே ஏரியாவை சேர்ந்தவர்கள் .கோயிலில் அடிக்கடி சந்திப்போம் சீட்டு வரவு செலவு ஆகியவற்றில் அவரும் இருக்கிறார் .

2. பிரதிவாதி என் கணவருக்கும் எனக்கும் தான் வரவு செலவு கணக்கு இருக்கிறது என்றால் சரியல்ல பணம் வாங்கியதே பிரதிவாதி தான் .பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல .பிரதிவாதியை அவருடைய கணவர் தான் என் வீட்டிற்கு கடன் வாங்கவே அழைத்து வந்தார் அப்போது அந்த சமயத்தில் நான் பிரதிவாதியிடமோ அவருடைய கணவரிடமோ ஏதாவது கையெழுத்து வாங்கினேன் என்று கேட்டால் பணம் கொடுத்ததே நம்பிக்கையின் பேரில் தான் கொடுத்தேன் அவர்கள் என்னிடம் கடன் உறுதி சீட்டில் கையெழுத்து செய்து கொடுத்திருக்கிறார்கள் மேலும் அவர்களுடைய பத்திரமும் கொடுத்திருக்கிறார்கள் என்ற சாட்சி மீண்டும் கூறுகிறார் .

3. கடன் உறுதி சீட்டில் கையெழுத்து செய்து கொடுத்த போது பிரதிவாதியிடம் நான் இடது கை பெருவிரல் ரேகையை பதித்து வாங்கவில்லை என்றால் அது எல்லாம் வாங்கவில்லை. பிரதிவாதி என்னிடம் கடனை வாங்கவில்லை என்றும் என்னிடம்

கையெழுத்து ஏதும் செய்து கொடுக்கவில்லை என்றும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல .

4. பிராதில் முதல் பக்கத்திலும் விபரங்களிலும் எஸ்.லதா என்று குறிப்பிட்டு இருந்த போதிலும் கடனுறுதி சீட்டில் டி.லதா என்றுதான் காணப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான் பத்திரத்தில் டி. லதா என்று தான் இருக்கிறது .நாங்கள் போட்ட பிராவில் பிரதிவாதியின் பெயரை எஸ் லதா என்று குறிப்பிட்டு போடுவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா என்று கேட்டால் அப்படி எதுவும் கிடையாது ஆனால் தாவா கடனுறுதி சீட்டில் அவர் டி.லதா என்று தான் கையெழுத்து செய்திருக்கிறார் .பிரதிவாதி தன்னுடைய பெயர் எஸ் லதா தான் என்றும் அவர் எல்லா இடங்களிலும் எஸ் லதா என்றுதான் கையொப்பம் செய்வார் என்றும் சொன்னால் சரியல்ல பத்திரத்தில் டி.லதா என்று தான் இருக்கிறது அதேபோல் கடனுறுதி சீட்டிலும் டி.லதா என்று தான் கையெழுத்து செய்திருக்கிறார் .

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்களுக்கும் கையெழுத்து செய்யப்பட்டு இருக்கும் மையிக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னால் ஆமாம் .தாவா கடனுறுதி சீட்டை எழுதியதாக குறிப்பிடப்பட்டிருக்கும் சிவக்குமார் என்ற நபர் என்னுடைய நண்பர் தான் .

6. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பின்பக்கம் பின்குறிப்பு காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான் அதனில் சிவகுமார் என்ற நபர் கையெழுத்து செய்து இருக்கிறார் என்று சொன்னாலும் சரிதான். கடந்த 10.3.2024 அன்று பிரதிவாதி எனக்கு பணம் கொடுத்தார் போல் பின்பக்கத்தில் காணப்படும் பின்குறிப்பு பிரதிவாதியால் கையெழுத்து செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல பிரதிவாதி என்னிடம் பணம் கொடுத்தார் அதற்கு சாட்சியாக சிவகுமார் மட்டும் கையெழுத்து செய்து இருக்கிறார். அதனுடைய நகல் பிரதிவாதியிடம் ஏற்கனவே கொடுத்துவிட்டேன்.

7. பிரதிவாதியின் கணவர் தற்போது உயிருடன் இல்லை அவர் இறந்துவிட்டார். பிரதிவாதி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். எனக்கும் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே இருந்த வரவு செலவு கணக்குகளை சரி செய்து கொள்ளலாம் என்று நான் தான் பிரதிவாதியின் பெயரை போட்டு ஒரு கடன் உறுதி சீட்டு தயார் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல அந்த கடன் உறுதிச்சீட்டை தான் இந்த வழக்கில் காரணமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல .வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரி அல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.